**CC**.**No**.217/2024

**Date**: 12.03.2026

ம.சா. 3. **ஆரோக்கிய சாமி, த/பெ.வேதமுத்து பாடத்தான் பட்டி**

**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

குறுக்கு விசாரணை

**1) நான் படித்துள்ளேனா என்றால் நான் 5 வகுப்பு வரை படித்துள்ளேன். நான் கையொப்பம் செய்துள்ள கடனுறுதிசீட்டில் என்ன எழுதியிருந்தது என்றால் பணம் கொடுத்த விபரம் இருந்தது. மேற்படி கடனுறுதிசீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால் 3 நபர்கள். ம.சா.ஆ.7 ஆவணத்தை எங்கு வைத்து எழுதியதாவோ, எங்கு வைத்து சாட்சி கையொப்பம் செய்தததாகவோ எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அருளாந்து மகன் அந்தோனிசாமி எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். அந்தோனிசாமி என்பவர் பாடத்ததான் பட்டியில் ஒரு முக்கிய நபர் என்றால் சரிதான். மேற்படி அந்தோனிசாமி எனக்கு பழக்கம் என்றால் சரிதான். மேற்படி அந்தோனிசாமி கேட்டுக்கொண்டதன்பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் பழனியப்பனின் தகப்பானர் பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எதிரியையும், புகார்தாரரையும் தெரியாது என்றாலும், பாடத்தான்பட்டியை சேர்ந்த அந்தோனிசாமியின் தூண்டுதலில்பேரில் புகார்தாரரை வைத்து தாவா வழக்கு காசோலை மற்றும் கடனுறுதிசீட்டை உற்பத்தி செய்த மேற்படி கடனுறுதிசீட்டில் எதிரி கடன் பெற்ற போது சாட்சி கையெழுத்துயிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**2) என் முன்னிலையில் புகார்தாரரிடம் எதிரி கடனுறுதிசீட்டு**

**எழுதிகொடுத்து தாவா கடனை வாங்கவும் இல்லை, எதிரிக்கு புகார்தாரரை யார் என்றே தெரியாது என்றாலும் சரியல்ல. நான் பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.12 18:00:43 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)